RKFI
RAAJKAMAL FILMS INTERNATIONAL

<u>உலகநாயகன் கமல்ஹாசன் வழங்கும்</u>

<u>ஆத்மன் சிலம்பரசன் டிஆர் நடிக்கும் #STR48</u>

<u>இயக்கம்: தேசிங்கு பெரியசாமி</u>

<u>தயாரிப்பு: கமல்ஹாசன், ஆர்.மகேந்திரன்.</u>

பத்திரிகைக் குறிப்பு:

மார்ச் 09, 2023

உலகநாயகன் கமல்ஹாசனின் ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்நேசனல் நிறுவனத்தின் தயாரிப்பாக, ஆத்மன் சிலம்பரசன் டிஆர் நடிக்கும் புதிய திரைப்படமான #STR48 பெருமிதத்துடன் அறிவிக்கப்படுகிறது. இந்தத் திரைப்படத்தை தேசிங்கு பெரியசாமி எழுதி இயக்க, உலகநாயகன் கமல்ஹாசன் மற்றும் ஆர்.மகேந்திரன் இணைந்து தயாரிக்கிறார்கள்.

கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் திரைப்படத்தின் வெற்றிக்குப் பிறகு தேசிங்கு பெரியசாமி இந்த பிரமாண்டமான படத்தை இயக்குகிறார். ஒரு சிறந்த கதைக்கான என்னுடைய நீண்ட தேடலுக்கு சரியான வாய்ப்பாக இந்தப் படம் அமைந்திருக்கிறது என்று ஆத்மன் சிலம்பரசன் டிஆர் தெரிவித்துள்ளார்.

ராஜ்கமல் நிறுவனத்தின் அடுத்தடுத்த தயாரிப்புகளாக, உலக நாயகன் கமல்ஹாசன் நடிக்க, மணிரத்னம் இயக்கும் திரைப்படம் #KH234; மற்றும் இந்நிறுவனத்தின் 51-வது தயாரிப்பாக சோனி பிக்சர்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கும், சிவகார்த்திகேயன் மற்றும் சாய் பல்லவி நடிப்பில், ராஜ்குமார் பெரியசாமி இயக்கும் திரைப்படம் போன்ற முக்கியமான படங்கள் முன்பே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், 56-வது தயாரிப்பாக இந்தத் திரைப்படம் உருவாக இருக்கிறது.

ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்நேசனல் நிறுவனம் சிந்திக்கத் தூண்டும், சுவாரசியமான, பெரிதும் பாராட்டப்படும் தரமான படங்களைக் கடந்த 40 வருடங்களாகத் தொடர்ச்சியாகத் தயாரித்து வருகிறது; #STR48 படமும் அப்படிப்பட்ட படமாகத்தான் இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

<u>நடிகரும், இயக்குனரும், தயாரிப்பாளருமான உலகநாயகன் கமல்ஹாசன் இது பற்றி தெரிவித்ததாவது,</u>

தரமான படைப்புகளைத் தரவேண்டும் என்பது ராஜ்கமல் பிலிம்ஸின் லட்சியம். இது நாற்பதாண்டுகளாகத் தொடர்கிறது. எங்கள் நோக்கத்திற்கு ஏற்ற படமாக இந்த ப்ராஜக்ட் அமைந்துள்ளது. திரு.சிலம்பரசன் டிஆர், திரு.தேசிங்கு பெரியசாமி, மற்றும் படக்குழுவினருக்கு என்னுடைய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

நடிகர் சிலம்பரசன் பேசுகையில்,

பொறுமை என்பது முக்கியமான ஒரு குணம். நிறைய நம்பிக்கை தேவைப்பட்டது, ஆனால் காத்திருந்ததற்கான பலன் கிடைத்துவிட்டது. என்னுடைய தீவிரமான படைப்புப் பசிக்குச் சரியான தீனியாக இந்தத் திரைப்படம் அமையும். ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்நேசனல் நிறுவனத்தில், கமல் சாரின் தயாரிப்பில் நடிப்பது என்பது மிகப்பெரிய கௌரவம். இயக்குனர் தேசிங்கு பெரியசாமி மீதும் அவருடைய திரைக்கதை மீதும் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறது. என் நடிப்பு வாழ்க்கையில் இந்தப் படம் முக்கியமான மைல்கல்லாக இருக்கும் என்று சிலம்பரசன் தெரிவிக்கிறார்.

இயக்குனர் தேசிங்கு பெரியசாமி பேசுகையில்,

இந்தத் திரைப்படத்தில் பங்கேற்பதையும், இந்தத் தனித்துவமான கதையைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்ததையும் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். உலகநாயகன் கமல் சாரின் ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இண்டர்நேசனல் நிறுவன  தயாரிப்பில் இயக்குவதால், இந்தப் படம் என் மனத்துக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறது. திறமையின் உறைவிடமான சிலம்பரசன் சாருடன் இணைந்து பணியாற்றுவது பெருமையாக இருக்கிறது, அவர் என்னுடைய திரைக்கதையைக் கேட்டு அதில் நம்பிக்கை வைத்த நாள் முதலாக மிகச் சிறந்த ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிறார். இந்த வாய்ப்பு அமையக் காரணமாக இருந்த திரு. மகேந்திரன் சாருக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



